# தமிழ்ப் பல்கலைக்கழகம்

**தஞ்சாவூர் – 613 010,**

தமிழ்ப் பல்கலைக்கழக விடுதிகளில் சமையல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் 4 சமையலர், 4 உதவி சமையலர் பணிக்கு, கல்விநிறுவனங்களைத் திறப்பதற்கு தமிழ்நாடு அரசு அனுமதிக்கும் நாளிலிருந்து ஓராண்டிற்குத் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து / அமைப்புகளிடமிருந்து கீழ்க்காணும் இனங்களுக்கு மூடி முத்திரையிடபட்ட ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்காணும் நாள் மற்றும் நேரத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக பதிவாளர்(பொ.) அவர்கள் முன்னிலையில், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் திறந்து முடிவு செய்யப்படும்.

**<u>ஒப்பந்தப்புள்ளி இனங்களின் விவரப் பட்டியல்</u>**

| வ. எண் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | படிவம் 1-ன் விலை ரூ. | வைப்புத் தொகை தொகை ரூ. | காலம் | படிவம் விற்பனை நாள் மற்றும் நேரம் | அளிக்கப்பட வேண்டிய கடைசி நாள் | திறப்பு நாள் மற்றும் நேரம் |
| **1.** | **<u>மகளிர் விடுதி</u>**<br>சமையலர் – 2<br>உதவி சமையலர் - 2<br>(மகளிர் மட்டும்) | 500 | 10,000 | தமிழ்நாடு அரசு அனுமதிக்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு மட்டும் | 3.09.2020 | 18.09.2020 மாலை 05.00 மணி | 21.09.2020 பிற்பகல் 03.00 மணி |
| **2.** | **<u>ஆடவர் விடுதி</u>**<br>சமையலர் – 2<br>உதவி சமையலர் - 2<br>(ஆடவர் மட்டும்) | 500 | 10,000 | | | | 21.09.2020 பிற்பகல் 04.00 மணி |

குறிப்பு:

1. மேற்கண்ட இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பம் உள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தினர் தங்களது Pan Card – ஐ காண்பித்து ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்று மேற்படி இனங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளைப் பின்பற்றி மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி அளிக்கவேண்டும்.
2. வங்கி வரைவோலை (D.D) எடுக்க வேண்டிய முடிவரி:

   The Registrar, Tamil University, Thanjavur – 613 010
3. இதர விவரங்களை மக்கள் தொடர்பு பிரிவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் என்ற அலுவலகத்தில் அலுவலக நாளில், அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது <u>https://www.tamiluniversity.ac.in/</u> என்ற இணையதள முகவரியில் அறியலாம். மேற்படி இனங்களுக்குரிய நிபந்தனைகளின்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம். காலதாமதமாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள், நிபந்தனைகளைப் பின்பற்றாத ஒப்பந்தப்புள்ளிகள் முன்னறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

பதிவாளர்(பொ.)

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் – 613 010,

பல்கலைக்கழக விடுதிகளுக்கான சமையலர் மற்றும் உதவி சமையலர்களுக்கான

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்ப் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மற்றும் மாணவியர்களுக்கு ஓராண்டு காலத்திற்கு மூன்று வேலை உணவு தயார் செய்யும் பணிக்கு ஆடவர் விடுதிக்கு சமையலர் -2,உதவி சமையலர் – 2 (ஆடவர் மட்டும்) மற்றும் மகளிர் விடுதிக்குச் சமையலர் -2,உதவி சமையலர் – 2 (மகளிர் மட்டும்) பணி செய்ய தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து / அமைப்புகளிடமிருந்து இரட்டை உறை (Double cover System) முறையில் மகளிர் மற்றும் ஆடவர் விடுதிகளுக்குத் தனி தனியே மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கும் நாள் | 03.09.2020 முதல் 18.09.2020 வரை அலுவலக நாள் மற்றும் நேரங்களில் மட்டும் |
| 2. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் கொடுக்க கடைசி நாள் மற்றும் நேரம் | 18.09.2020 வெள்ளி கிழமை பிற்பகல் 5.00 மணிவரை |
| 3. | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 21.09.2020திங்கள் கிழமை பிற்பகல் 3.00 மணி மகளிர் விடுதி / 4.00 மணி ஆடவர் விடுதி |
| 4. | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை | ரூ.500/- (திரும்ப பெறத்தக்கதல்ல) |

ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://www.tamiluniversity.ac.in/ என்ற இணைய தளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய தளத்திலிருந்து பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பும் போது விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.500/-க்கும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ.10,000/-க்கும் தனித்தனியாக The **Registrar, Tamil University**, Thanjavur – 613 010 என்ற பெயருக்கு வரைவோலை (D.D) எடுத்து படிவத்துடன் இணைத்து ஒப்பந்தப்புள்ளி உறையின்மீது ஆடவர் விடுதி மற்றும் மகளிர் விடுதி என்று குறிப்பிடபட்ட உறைகள் 18.09.2020 வெள்ளி கிழமை பிற்பகல் 5.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் – 613 010,

பல்கலைக்கழக ஆடவர் மற்றும் மகளிர் விடுதிகளுக்கான சமையலர் மற்றும்

உதவி சமையலர்களுக்கான

**ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள்**

**ஒப்பந்தப்புள்ளி படிவம் விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்.**

1. ஒப்பந்தத்திற்கான விண்ணப்பதாரர் தனியார் நிறுவனம் ஆகவோ பொது நிறுவனம் ஆகவோ அல்லது கூட்டு நிறுவனமாகவோ (Firm) இருக்கலாம். 3 வருடத்திற்கு முன் அனுபவ சான்று இணைக்கப்படவேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தரக் கணக்கு எண் அட்டை (Pan Card) நகல் இணைக்கவேண்டும்.
3. ஏற்கெனவே ஒப்பந்தக்காரராக இருந்து நிபந்தனைகளின்படி நடக்க தவறியவர்கள் அவர்களது ரத்த உறவினர்கள், 21 வயது பூர்த்தி அடையாதவர்கள், தமிழ்ப் பல்கலைக்கழக பணியாளர்கள் அவர்களது ரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினர்கள் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் மீது வழக்கு தொடர்ந்தவர்கள் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளி அளிக்க தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.
4. ஆடவர் விடுதிகளுக்குத் தனியாகவும் மகளிர் விடுதிகளுக்குத் தனியாகவும் ஒப்பந்தப்புள்ளி அளிக்க வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள்.**

1. முதல் உறையில் ஒப்பந்தக்காரரது தகுதிகாண் விவரங்களை வைத்து மூடி முத்திரையிட்டும் (Technical bid) இரண்டாவது உறையில் விலை விகிதம் குறிப்பிட்டும் EMD – க்கான வரைவோலையுடனும், மூடி முத்திரையிட்டும் (Financial bid) மூன்றாவது உறையில் இந்த இரண்டு உறைகளையும் வைத்து மூடி முத்திரையிட வேண்டும். ஒவ்வொரு உறையின் மீதும் தகுதிகாண் படிவம் மற்றும் விலை விகித படிவம் எனத்தனித்தனியாக எழுதப்பட்டு மூன்றாவது உறையில் மேற்கண்ட இரண்டு உரைகளையும் வைக்கவேண்டும்.
2. இரு உறைகள் முறையில் நடத்தப்படும் ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி திறப்பன்று தகுதிகாண் படிவம் உள்ள உறை (Technical bid) முதலில் திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து தகுதியுடைய ஒப்பந்தக்காரரின் விலை விகித படிவம் (Financial bid) திறக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளி காப்புத் தொகை செலுத்தியதற்கான இரசீது வங்கி வரைவோலை மற்றும் அசல் சான்றிதழ் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், தொகையில் அடித்தல், திருத்தல் செய்யப்பட்டு இருந்தாலும், கையொப்பமிடாது இருந்தாலும், ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
4. ஒப்பந்தப்புள்ளி Price Bid படிவத்தின் படி சேவைக்கட்டணத்தை குறிப்பிடவேண்டும் (5% and less will be out rightly rejected) சேவைக் கட்டணம் 5% மற்றும் 5% –க்கு குறைவாக குறிப்பிட்டால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினைப் பக்க வாரியாக (Page) அட்டவணையிட்டு பொருளடகத்தில் (Index) தெரிவிக்கவேண்டும்.
6. நிறுவனங்களின் விபரங்கள் அதிகமாக இருப்பின் தனி இணைப்பாக கொடுக்கவேண்டும்.

7. விண்ணப்பதாரர் கடந்த 2 வருடங்களில் எந்த ஒரு வாடிக்கையாளராலும் தண்டிக்கப்படவோ அல்லது தன்மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவோ இல்லை என்பதற்கான பிரமாணப்பத்திரம் ஒன்றை வழங்க வேண்டும்.
8. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2019 – 2020 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி நிர்ணய ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குக் குறைவில்லாமல் குறிப்பிடவேண்டும். மேலும் நாள் 1-க்கு நபர் 1-க்கு வழங்கப்பட வேண்டிய தொகையை எண்ணாலும் எழுத்தாலும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.
9. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் குறிப்பிடும் விலைப்புள்ளி தொகைக்கு விரிவாக குறிப்பு (Break up Details) ஒன்றை இணைக்கவேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த சதவீதம் சேவைக்கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் L1 என முடிவு செய்யப்பட்டு, விலைக்குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படும். (The tenderer who has quoted lowest percentage of salary and service charges will be declared as L1 and called for rate negotiations)
11. ஒப்பந்தப்புள்ளியில் ஒரே விலைப்புள்ளி இருப்பின் நிறுவனதாரர் / மற்றும் பணியாளர்களின் அனுபவத்தின் அடிப்படையில் L1 என முடிவு செய்யப்படும்.
12. எந்தவொரு காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தி வைக்கவோ, தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகத்துக்கு அதிகாரம் உண்டு.
13. ஒப்பந்தப்புள்ளி தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்ட விதிகளுக்கும் பல்கலைக்கழக நிருவாகத்தின் ரத்து அங்கீகாரத்திற்கும் உட்பட்டது ஆகும்.

**ஒப்பந்தம் அளித்தப் பிறகு நிறுவனத்தாருக்கான நிபந்தனைகள்.**

1. ஒப்பந்தக்காரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஏற்று கொண்ட நாளிலிருந்து 7 தினங்களுக்குள் தனது சொந்த செலவில் உடன் ரூ.100/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேறு பெயர்களுக்கு மாற்றத்தக்கதல்ல
3. நிபந்தனைகளை மீறினாலோ, பின்பற்ற தவறினாலோ அல்லது பணிகளைச் சரிவர செய்யா விட்டாலோ, ஒப்பந்தக்காரர் நிபந்தனைப்படி நடக்கவில்லை என பல்கலைக்கழக நிருவாகம் கருதினாலும், ஒப்பந்தக்காரருக்கு எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ரத்து செய்திட நிருவாகத்திற்கு அதிகாரம் உண்டு.
4. விண்ணப்பத்தாரரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் பொய்யானவை என தெரிய வருமானால் முன்வைப்புத் தொகை திருப்பித்தரமாட்டாது.
5. சமையல் பணியில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையை கூட்டவோ, குறைக்கவோ பல்கலைக்கழக நிருவாகத்திற்கு அதிகாரம் உண்டு. குறைத்தால் ஒப்பந்த தொகையில் குறைக்கப்பட்ட நபர்களுக்கு தக்கவாறு ஊதியம் குறைத்து வழங்கப்படும். அதிகப்படுத்தினால் அதிகப்படுத்தப்பட்ட நபர்களுக்குத்தக்கவாறு தொகை கூடுதலாக வழங்கப்படும்.
6. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை பல்கலைக்கழக நிருவாகம் சட்டப்படி அனுமதிக்காது.

7. சமையல் நிறுவனத்தின் பணி திருப்திகரமாக இல்லையெனில், ஒப்பந்தத்தை இரத்து செய்ய பல்கலைக்கழக நிருவாகத்திற்குப் பூரண உரிமையுண்டு. பணியில் கவனக்குறைவாக இருக்கும் சமையலர் மற்றும் உதவி சமையலர் நடத்தையில் நிருவாகத்தால் குறை கண்டறியப் படுமானால் அவர்களை இப்பல்கலைக்கழக சமையல் மற்றும் உதவி சமையலர் பணியிலிருந்து ஒப்பந்த நிறுவனம் நீக்கிவிட வேண்டும். அவ்வாறு நீக்கப்பட்ட பணியாளர்களுக்குப் பதிலாக வேறுபணியாளரை உடன் பணி அமர்திட வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தாருக்கும் பல்கலைக்கழகம் சார்பாக வழங்கப்படும் தளவாடப் பொருட்களை நல்ல முறையில் பராமரித்து ஒப்பந்த காலம் முடியும்பொழுது ஒப்பந்தத்தாரர் பல்கலைக்கழகத்திடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு மீள வரப்பெறாத தளவாடப் பொருட்களுக்கு வைப்புத்தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
9. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை மீறினால் இப்பணிக்கான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். காப்புத் தொகையாக செலுத்திய தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.
10. ஒப்பந்தப்பணியாளர்களின் மாத ஊதியத்தை அந்தந்த பணியாளர் பெயரில் வழங்குவதற்கு ஏதுவாக ஒரே வங்கியில் அவர்களது பெயரில் தனித்தனியாக வங்கி கணக்கு துவங்கி E.C.S. மூலம் தொகை பட்டுவாடா செய்யப்படவேண்டும்.

    ஊதியம் வழங்கப்பட்ட விவரத்தினைப் பிரதிமாத ஊதியப்பட்டியலுடன் சேர்த்து ஒப்பந்ததாரர் அளிக்கவேண்டும்.
11. நடப்பு ஒப்பந்த காலத்தில் முதல் மாதம் 00.07.2020 நீங்கலாக அடுத்து வரும் மாதங்களில் பட்டியலுடன் முந்தைய மாத பணிசெய்த ஒப்பந்தபணியாளர்களின் கணக்கில் தொழிலாளர் சேமநல நிதி (E.P.F) மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீடு (E.S.I) தொகை சந்தா செலுத்திய இரசீது இணைத்து வழங்க வேண்டும். அவ்வாறு வரப்பெறாத பட்டியல்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது.
12. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தார் ஒவ்வொரு பணியாளருக்கும் அந்தந்த மாதத்திற்குரிய Individual EPF Pass book, Individual ESI Statement, ஆகிய ஆவணங்களைப் பிரதி மாதம் 20 –ஆம் நாளுக்குள் நேரில் இவ்வலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும். மேற்படி ஆவணங்களைச் சரிபார்த்து சரித்தன்மை உறுதி செய்த பிறகே அடுத்த மாதத்திற்கான தொகை பட்டுவாடா செய்யப்படும். இதில் எவ்வித சலுகைகளும் வழங்கப்பட மாட்டாது.
13. ஒப்பந்தக்காரரால் நியமிக்கப்படும் சமையல் பணியாளர்களின் பணி குறித்து தமிழ்ப் பல்கலைக்கழக, விடுதிக்காப்பாளர் அவர்களது சான்றின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் பணி செய்ததற்கான தொகை வழங்கப்படும்.
14. வருமானவரியும், சேவை வரியும், அவ்வப்போது நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு மாதாந்திர தொகையிலிருந்து பல்கலைக்கழக நிருவாகத்தால் பிடித்துச் செலுத்தப்படும்.

**ஒப்பந்த நிறுவனத்தால் நியமிக்கப்படும் பணியாளர்களுக்கான நிபந்தனைகள்.**

1. ஒப்பந்ததாரர் சமையல் பணிக்கு நியமிக்கும் நபர்கள் எண்ணிக்கை மற்றும் பணியாளர்களின் இரண்டு புகைப்படம் அவர்களின் முழு முகவரி தன் விவரக்குறிப்பு (Bio - Data) ஆகியவற்றை நிருவாகத்திடம் வழங்க வேண்டும்.
2. சமையல் பணிக்கு அமர்த்தப்படும் நபர்கள் 21 வயது நிரம்பியவர்களாகவும், உடல் தகுதியுடையவர்களாகவும், பணிக்குவரும்பொழுது சுகாதாரமான முறையில் ஆடை அணிந்தும் வருவபவர்களாக இருத்தல் வேண்டும்.
3. வேலைக்கு அமர்த்தப்படும் நபர்கள் பல்கலைக்கழக சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வேலை செய்வோம் என்று உறுதிப்பத்திரம் மூலம் உறுதி அளித்திட வேண்டும்.
4. சமையல் பணிக்கு வருகிற பணியாளர்கள் பல்கலைக்கழகத்தில் பொருத்தப்பட்ட உணர்க்கருவி (Bio - Metric) இயந்திரத்தில் கைரேகை பதிவு செய்யவேண்டும்.
5. சமையல் பணியில் இருக்கும் பணியாளர்கள் பல்கலைக்கழக பணியாளர்களிடம் மற்றும் மாணவ, மாணவியிர்களிடம் கண்ணியமான முறையில் நடந்துக் கொள்ளப் பயிற்சி அளிக்க வேண்டியது ஒப்பந்த நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாகும்.
6. சமையல் பணியாளர் விடுதி காப்பாளர்கள் வழங்கும் உணவு பட்டியலின் படி சுவையாக உணவு தயாரித்து காலை, நண்பகல், இரவு மூன்று வேளையும் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கவேண்டும். மாணவ மாணவியர் உடல் நலன் பேணி காக்கும் வகையில் பணியாற்றவேண்டும். தவறினால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை ( Deposit Amount) பறிமுதல் செய்யப்படும்.
7. சமையல் பணிக்கு வரும் பணியாளர்கள் பல்கலைக்கழக நிருவாகம் நிர்ணயிக்கும், நிறத்தில் ஒரே மாதிரியான அடையாள அட்டையும், சீருடையும் அணிந்து பணிபுரிய வேண்டும். சலவைப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு**

- நியாயமான வேறு நிபந்தனைகள் இருந்தால் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு நேரத்தில் தெரிவிக்கப்படும்.

பதிவாளர்(பொ)

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# <u>தமிழ்ப் பல்கலைக்கழகம்</u>

## <u>தஞ்சாவூர் – 613 010,</u>

### <u>ஆடவர் விடுதி</u>

பல்கலைக்கழக ஆடவர் விடுதியில் சமையலர் மற்றும் உதவி சமையலர்களுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்.

---------------------------------------------------------------------- என்பவர் பெயரில் / என்ற நிறுவனத்திற்கு இப்படிவம் வழங்கப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆடவர் விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு மூன்று வேலை உணவு தயார் செய்து வழங்கும் பணியை மேற்கொள்ள சமையலர் -2,உதவி சமையலர் – 2 (ஆடவர் மட்டும்) நபர்களைக் கல்விநிறுவனங்களைத் திறப்பதற்கு தமிழ்நாடு அரசு அனுமதிக்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக.

பெறுநர்

பதிவாளர் (பொ.)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அய்யா,

நான் / நாங்கள் தங்கள் நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ள சமையலர், உதவி சமையலர் தேவைகுறித்து அறிந்தேன். அதன்படி இப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு தமிழ்ப் பல்கலைக்கழக ஆடவர் விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு மூன்று வேலை உணவு தயார் செய்து வழங்கும் பணியை மேற்கொள்ள சமையலர் -2,உதவி சமையலர் – 2 (ஆடவர் மட்டும்) பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட தொகைக்குச் சம்மதிக்கிறேன் / சம்மதிக்கிறோம்.

(திருப்புக…)

| | | | |
|---|---|---|---|
| 1. | விவரம் | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் ஆடவர் விடுதிகளில் சமையலர் மற்றும் உதவி சமையலர் ஒப்பந்த அடிப்படையில் பணியை மேற்கொள்ளுதல் தொடர்பாக. | |
| 2. | முன்வைப்புத் தொகை | 10,000 /- | |
| 3. | தேவைப்படும் பணியாளர் | 1. சமையலர் - 2 ஆண்<br>2. உதவி சமையலர் - 2 ஆண் | |
| 4. | ஒரு நபருக்கு ஒரு நாளுக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை | | |
| | பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிடித்தம் (தலைப்பு வாரியாக) (Break up details) | தொகை | |
| | அடிப்படை ஊதியம் (தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் 2019 – 2020 – ஆம் ஆண்டு தினக்கூலி நிர்ணய அட்டவணை | சமையலர் | உதவி சமையலர் |
| | | ரூ.462 – (நாள் 1-க்கு) | ரூ.385 – (நாள் 1-க்கு) |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | கூடுதல் (எண்ணாலும் எழுத்தாலும்) தெரிவிக்கப்பட வேண்டும | ரூ.(ரூபாய்) | ரூ.(ரூபாய்) |
| 5. | சமையலர் மற்றும் உதவி சமையலர் கூடுதல் தொகையை (எண்ணாலும் எழுத்தாலும்) தெரிவிக்க வேண்டும் | ரூ.(ரூபாய்) | |

திருத்தங்களின் எண்ணிக்கை

பதிவாளர்(பொ.)

ஒப்பந்ததாரர் கையொப்பம்

# <u>தமிழ்ப் பல்கலைக்கழகம்</u>

## <u>தஞ்சாவூர் – 613 010,</u>

### <u>மகளிர் விடுதி</u>

பல்கலைக்கழக மகளிர் விடுதியில் சமையலர் மற்றும் உதவி சமையலர்களுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்.

------------------------------------------------------------------- என்பவர் பெயரில் / என்ற நிறுவனத்திற்கு இப்படிவம் வழங்கப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக மகளிர் விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு மூன்று வேலை உணவு தயார் செய்து வழங்கும் பணியை மேற்கொள்ள சமையலர் -2, உதவி சமையலர் – 2 (மகளிர் மட்டும்) நபர்களைக் கல்விநிறுவனங்களைத் திறப்பதற்கு தமிழ்நாடு அரசு அனுமதிக்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக.

பெறுநர்

பதிவாளர் (பொ.)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அய்யா,

நான் / நாங்கள் தங்கள் நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ள சமையலர், உதவி சமையலர் தேவைகுறித்து அறிந்தேன். அதன்படி இப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு தமிழ்ப் பல்கலைக்கழக மகளிர் விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு மூன்று வேலை உணவு தயார் செய்து வழங்கும் பணியை மேற்கொள்ள சமையலர் -2,உதவி சமையலர் – 2 (மகளிர் மட்டும்) பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட தொகைக்குச் சம்மதிக்கிறேன் / சம்மதிக்கிறோம்.

(திருப்புக….)

| | | | |
|---|---|---|---|
| 1. | விவரம் | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் மகளிர் விடுதிகளில் சமையலர் மற்றும் உதவி சமையலர் ஒப்பந்த அடிப்படையில் பணியை மேற்கொள்ளுதல் தொடர்பாக. | |
| 2. | முன்வைப்புத் தொகை | 10,000 /- | |
| 3. | தேவைப்படும் பணியாளர் | 1. சமையலர் - 2 பெண்<br>2. உதவி சமையலர் - 2 பெண் | |
| 4. | ஒரு நபருக்கு ஒரு நாளுக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை | | |
| | பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிடித்தம் (தலைப்பு வாரியாக) (Break up details) | தொகை | |
| | அடிப்படை ஊதியம் (தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் 2019 – 2020 – ஆம் ஆண்டு தினக்கூலி நிர்ணய அட்டவணை | சமையலர் | உதவி சமையலர் |
| | | ரூ.462 – (நாள் 1-க்கு) | ரூ.385 – (நாள் 1-க்கு) |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | கூடுதல் (எண்ணாலும் எழுத்தாலும்) தெரிவிக்கப்பட வேண்டும | ரூ.(ரூபாய்) | ரூ.(ரூபாய்) |
| 5. | சமையலர் மற்றும் உதவி சமையலர் கூடுதல் தொகையை (எண்ணாலும் எழுத்தாலும்) தெரிவிக்க வேண்டும் | ரூ.(ரூபாய்) | |

திருத்தங்களின் எண்ணிக்கை

பதிவாளர்(பொ.)

ஒப்பந்ததாரர் கையொப்பம்